Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் 08 விலை ரூபா 4-50

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 02 ஏப்ரல் (14 - 04 - 1991) ஞாயிற்றுக்கிழமை ஓசை 55

அடையாள அட்டைகளை கல்வி திணைக்களம் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 23ஆம் திகதி ஆரம்பமாக உள்ள கல்விப் பொதுத் தரதர உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த இடம் பெயர்ந்த வெளிமாவட்ட மாணவர்கள் தமது பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை யாழ். கல்வித்திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்று கல்வித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சிறிலங்கா இராணுவ (6ஆம் பக்கம் பார்க்க)

இரண்டு நாட்கள் மோதலில்

மியாங்குளத்தில் 34 புலிகள் வீரமரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மியான் குளப் பகுதியில் விடுதலைப்புலிகள் இரு நாட்கள் மேற்கொண்ட இருவேறு தாக்குதலில் பல இராணுவத் தினர் கொலலப்பட்டனர். பலர் படுகாயம் அடைந்தனர். விடுதலைப் புலிகள் தரப்பில் முப்பத்திநான்கு புலிகள் வீரமரணமடைந்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை ஐந்துமணியளவில் சரடிகன குள முகாமிலிருந்து புலுட்டைமானோடை வழியாக அகியாரோடையைத் தாண்டி மியாங்குளம் நோக்கிச் சென்று கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர். பிற்பகல் இரண்டுமணியளவில் ஆரம்பித்த இத்தாக்குதல் மாலை 5.45 வரையும் நீடித்தது.

இந்தத் தாக்குதலின்போது (6 ஆம் பக்கம் பார்க்க)

புகழுடம்புகளை மீட்க இரண்டாம் நாள் போர்

செவ்வாய்க்கிழமை மோதலில் வீரமரணமடைந்த போராளிகளின் புகழுடல்களை மீட்கப்படாமையினால் அடுத்த நாள் அதை மீட்கச் சென்ற விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் மியாங்குளத்தில் மோதல் ஏற்பட்டது. இம் மோதலின்போதும் இராணுவ தரப்பில் பெருமளவில் இழப்புக்கள் ஏற்பட்டதாயினும் சரியான தகவல்கள் தெரியவரவில்லை; அதேவேளை இம் மோதலில் பன்னிரண்டு புலிகள் வீரமரணமடைந்தனர்.

இந்த இரண்டாவது மோதல் காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி 10 மணிவரை நடை (6 ஆம் பக்கம் பார்க்க)

முதல் நாள் போரில் 22 போராளிகள் வீரமரணம்

மியாங்குளம் பகுதியில் முதல் நாள் மோதலில் வீரமரணமடைந்த போராளிகளின் விபரம் வருமாறு:

★ கப்டன் வசந்தன்
★ லெப். இன்பராஜ்
★ லெப். சக்தி
★ சுதந்தன்
★ குகிந்தன்
★ புஸ்பராஜ்
★ பதுன்
★ கண்ணன்
★ விசாகன்
★ அருள்
★ மைமா

(6 ஆம் பக்கம் பார்க்க)

புகழுடம்பு மீட்புப் போரில் வீரமரணமடைந்த புலிகள்

மியாங்குளம் பகுதியில் வீரமரணமடைந்த போராளிகளின் உடல்களை மீட்கும் இரண்டாம்நாள் போரில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட போராளிகளின் விபரம் வருமாறு:

★ கப்டன் சதீசன் (வானழகன் சேனை)
★ கப்டன் அமுதன்
★ லெப். தேவன்
★ 2-வது லெப். பாப்பா
★ 2-வது லெப். மாலி
★ கிளி
★ அமல்ராஜ்
★ செல்வருபன்
★ நிமால்
★ நெடுமாறன்
★ நாவ்
★ ஜெகவிந்தன்

மாவீரர்களுக்கு மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நகரசபை முகாமைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினருடன் நேற்று முன்தினம் ஏற்பட்ட மோதலில் வீரமரணமடைந்த லெப்டினன்ட் உத்தரவின் புகழுடல் நேற்றைய தினம் வடமராட்சிப் பகுதியில் பொது மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின் வடமராட்சி மாவீரர் மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது. (6 ஆம் பக்கம் பார்க்க)

இன்று பால் தேவையில்லை

(யாழ்ப்பாணம்)

புதுவருட தினத்தை முன்னிட்டு இன்றையதினம் யாழ் போதனாவைத்தியசாலையில் நோயாளரைப் பார்வையிடுவதற்காக பால் அனுமதி தேவையில்லை என யாழ் செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

புத்தாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுப் புத்தாண்டு விழா நாளை திங்கள் பி.ப. இரண்டுமணியளவில் திருநெல்வேலி முத்துத்தம்பிமகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது நல்லூர் உதவி அரசாங்க அதிபர் ஆ. மகாலிங்கம் விழாவுக்குத் தலைமை தாங்குவார்.

கீரிமலை வரும் தீட்சதர்

(கொழும்பு)

சிதம்பரம் தேவஸ்தானத்தைச் சேர்ந்த டாக்டர் சுவாமிநாத தீட்சதர் எதிர்வரும் 17ஆம் திகதி இலங்கை வருகிறார். இந்து கலாசார அமைச்சு கீரிமலை மடம் மூலம் அழைப்பை ஏற்றுக்கொண்டே இலங்கை வருகிறார். அவரைக் சிறிலங்கா இராணுவம் கீரிமலைப் பகுதியில் நிலை கொண்டிருப்பதால் இவர் கீரிமலைப் பக்கம் தலை வைத்தும் படுக்க முடியாது.

தீட்சதர் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் குமாரவர்.

கண்ணி வெடிகள் அகற்ற யப்பான் கப்பல்

(கொழும்பு)

அண்மையில் பாரசீக வளைகுடாப் போரின்போது வைக்கப்பட்ட நிலக்கண்ணி வெடிகளை அகற்ற படைக்கப்பல்களை அனுப்ப யப்பானிய அரசு முடிவு செய்துள்ளது. இத்தகவலை யப்பானிய பிரதமர் கொய்சுமி கைபு தெரிவித்துள்ளார்.

பிரசோற்பத்தி வருடம் காலை 7.22 க்கு பிறக்கிறது

இன்று பிறக்கும் பிரசோற்பத்தி வருடப்பிறப்பு காலை 7.22 மணிக்கு ஆரம்பமாகுமாவாரைத் திதியில் ரேவதி நட்சத்திரம் 2ஆம் பாதத்தில் மேடலக்கினத்தில் நிகழ்கிறது.

வைகிரேடக் கொடுப்பனவுகளுக்கு நிர்ணய காலை 9.10 மணிமுதல் 9.47 மணிவரையும் திங்கள் நண்பகல் 1.07 மணிமுதல் 2.06 மணிவரையும், புதன் காலை 6.04 மணிமுதல் 7.37 மணிவரையும் பொருத்தமான நேரங்களாக இருக்குமென வாக்கிய பஞ்சாங்கம் கணிப்பிட்டுள்ளது.

இந்திய வர்த்தகர் குழு சிறிலங்கா வரவுள்ளது

(கொழும்பு)

வர்த்தக உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளும் பொருட்டு இந்திய வர்த்தகர் வர்த்தகர் சம்மேளனத்தின் தூதுக்குழு ஒன்று கொழும்பு வரவிருக்கிறது. இதே வேளை இலங்கை முதலீட்டு ஊக்குவிப்புக் குழு ஒன்று இந்தியா செல்லவிருக்கிறது.

இலங்கைத் தூதுக் குழுவுக்கும், இந்திய தூதுக் குழுவுக்குமிடையில் புது டில்லியில் மூன்று நாட்கள் நடைபெற்ற பேச்சுக்கள் கடந்த புதனன்று முடிவடைந்தது. பொருளாதார உறவுகளை விரிவிப்பதற்கு இரு பகுதியினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர். (6 ஆம் பக்கம் பார்க்க)

ஒன்றை ஒன்று துரத்திய இரு மரதன் ஓட்டப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

மரதன் ஓட்டப் போட்டிகளில் ஒருவரை ஒருவர் துரத்துவதை அனைவரும் கண்டிருக்கிறோம். ஒரு மரதன் ஓட்டப் போட்டியை இன்னொரு மரதன் ஓட்டம் போட்டி துரத்தி வெற்றிகொள்வதை காணக் கூடியதாக இருந்தது; ஒரு மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றியாக ஓடிக்கொண்டிருந்தவரை அடுத்த மரதன் ஓட்டப் போட்டியில் முதலாவதாக வந்தவர் துரத்திக் கொண்டிருந்தார். அரியாலை மக்களால் வருடாவருடம் பிரித்த நிற்று வெகு கோலாகலமாகக் கொண்டாடப் படும் அதேவேளை திருநாள் கொண்டாட்ட விழாவினையே இக் காட்சியைக் காணக்கூடியதாக இருந்தது.

பொன் விழாவில் பிரித்து (6 ஆம் பக்கம் பார்க்க)

யுத்தநிறுத்தம் என்ற பேச்சிற்கே இடமில்லை

— ஹமில்டன் வணசிங்கா

(கொழும்பு)

தமிழ் - சிங்கள புத்தாண்டு தினத்தையொட்டி தற்காலிக போர் நிறுத்தம் கொண்டுவரப்படலாம் என்ற இளப்பப்பட்ட ஊகங்களுக்கு சிறிலங்கா இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்கா பதிலளித்துள்ளார்.

பி. பி. சிறிக் கொழும்பு மூவர் கிறிஸ் மெரிஸுக்கு அளித்த பேட்டியில் யுத்த நிறுத்தம் என்ற பேச்சிற்கே இடமில்லையென இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்கா கூறியுள்ளார். மேலும் அவர் தற்காலிக போர் நிறுத்தம் பிரகடனம் செய்யப்படவில்லை என்பதையும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை தொடரும் என்பதையும் தெளிவாக்கியுள்ளார்.

வரி விளம்பரம்

பழைய புத்தக விற்பனை நிலையம்

பழைய புத்தகங்கள், கொப்பி, பேப்பர் போத்தல் செம்பு பித்தளை கோழித்தீவு சீமெந்து உறைகள் உரப்பைகள் வாங்கப்படும், விற்கப்படும் சேனதிராசா பழைய புத்தக விற்பனை நிலையம், 57 ஸ்ரான்லி றோட், (இலங்கை வங்கி முன்னே) யாழ்ப்பாணம்

(B 2301)

அழைப்பு

அனித்தா பரடசாலையில் பயிற்சி பெற்ற சில பழைய மாணவர்களையும் 20.4.91 ஆம்திகதியன்று எம் நிலையத்தில் வரது சந்திக்கும்படி அதன் ஆசிரியர் கேட்டுக் கொள்கிறார். அனித்தா தையல் பயிற்சி நிலையம், பூநாறிமரம், கொக்குவில்.

(B-2368)

பறிபோன

தாழ்த்தப்பட்ட மக்கள், கிறிஸ்தவர்கள், ஜனாப்பியருக்குத் தனித்தனித் தொகுதிகள் வழங்கப்பட்டன. ஏரவாடி சிறையிலிருந்த மகாத்மா காந்தி என்முடிவை வெளிப்பட்டார் ஜாதி இந்துக்களிலிருந்து தீண்டப்படாத இந்துக்களை பிரித்தால் ஆகாரத்தத் செய்யுவரை சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பதென்று தம் முடிவை வெளிப்படுத்தினார். டாக்டர் அம்பேத்கார் கையில் ஊசலாடியதுதிடீரென்று அம்பேதகார் காந்தியின் உயிரைக் காப்பாற்றுவதற்காகத் தன் அரசியல் போக்கை மாற்றிக் கொண்டார் ஆனால், அதேவேளை "தனித்தொகுதி எனபதைத் தாழ்த்தப்பட்டோருக்கு மட்டும் அளிக்க விரும்பவில்லை அவ்வாறிருக்க ஏன்காந்தி தாழ்த்தப்பட்டவர்களை வாக்திரம் பிரித்து இந்நிலையை எடுத்துள்ளார் என்று துவிதிதிரமாக இருக்கிறது" என்றார் அம்பேதகார்.

கடைசிக் காலத்தில் அம்பேத்கார் தனது போக்கை மாற்றிக் கொண்டார் இந்திய அரசியல் நிர்ணய சபை கூடிய போது, டாக்டர் அம்பேத்கார் அரசியல் நிர்ணய சபையில் ஆற்றிய பங்கு பெரிதும் வியப்பிற்குரியதாகும். 1947ஆகஸ்ட் 3ஆம் திகதி சுதந்திர இந்தியாவின்முதல் அமைச்சரவை வெளியிடப்பட்டது. அம்பேத்காரும் அதில்இடம்பெற்றார்.

இந்தியா சுதந்திரம் அடைந்து இன்று 44 ஆண்டுகள் ஆகிவிட்டன. அம்பேதகாரின் கனவுகள் இன்றுவரைநிறைவாகவில்லை அதுமட்டுமே ஆணைக்குழுத் தீர்மானத்துக்கும் பிறகும் நிறைவேறவில்லை.

இந்து சாதனை

தென்மராட்சிப் பகுதியில் பல்லைக்கழக அனுமதியில் இவ்வாண்டும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி சாதனை புரிந்துள்ளது. கலை, வர்த்தக, விஞ்ஞான பீடங்களில் இவ்வாண்டு 48 மாணவர்கள் இக்கல்லூரியில் இருந்து அனுமதி பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (மு)

கல்வி

G C E (OL) கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரைதேர்ச்சியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவியலில் தவறியவர்களுக்கும் 24வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 20 மணித்தியாலத்திலிருந்து 40 மணித்தியாலத்திற்குள் விஷேட கற்கைக்கு கற்பிக்கப்படும் ஆறுமுகநாதன் 10, சந்தோஷ் ஒழுங்கை லோகேந்திரா வீதி, கண்டுக்குளி.

(R-1326)

91 ஆம் நாள் நினைவு அஞ்சலி

தாயக மண்ணில்
24 - 10 - 73

தமிழர் கனங்களில்
14 - 01 - 91

வீரவேங்கை
மாயவன்

(நாகரத்தினம் புனிதராசா)
குச்சவெளி, திருமலை

திட்டமிட்டெங்கள் திருமலைநகரை
தின்றிடும் பேரினவாதப் பேயை
வெட்டி வீழ்த்திட வேங்கைகள் படையில்
வீரனாய் நின்ற மாயவா - நீ
கொட்டிய குருதிச் சேற்றினில் விடுதலைச்
செந்தாமரை மலரும்

தாய், தந்தையர், சகோதரர்கள்,
பெற்றார், உறவினர், நண்பர்கள்.

(R/ 1327)

சாயி அக்குபங்சர் சிகிச்சை நிலையம்

★ வாதம்
★ ஆஸ்த்மா
★ மூட்டுக்காய்ச்சல்
★ நீண்டநாள் மனநோய்கள்

மற்றும்

மாற்றமுடியாது எனக் கணிக்கப்படட நீண்டநாட்கள் கொண்ட
எந்த வகையான நோய்களாக இருந்தாலும்
"வர்மானிய அலகு முறைச் சிகிச்சை"
எனப்படும் தமிழ் அக்குபங்சர் சிகிச்சை மூலம் சிகிச்சையளிக்கப்படும்.

வைத்திய கலாநிதி V. P. சுந்தரராஜன்
(விசேட அக்குபங்சர் சிகிச்சை நிபுணர்)
இல: 10 பருத்தித்துறை வீதி, யாழ்நகர்.

குறிப்பு: முழுக்க முழுக்க தமிழ் முறையிலும், அதி நவீன முறையிலும் சிகிச்சை அளிக்கப்படும்.

(B 2129)

உன்மறைவின் 2-ம்வருடம்

லெப். கரன் சூட்டி
(ந. பாஸ்கரன்)

மலர்வு: 18-12-68 உதிர்வு: 14-04-89

அஞ்சலிகள்

உன் நினைவை எம்மிடையே நீ
ஆழப் பதித்துச் சென்றதனால்,
ஆண்டுகள் இரண்டு ஆனபோதும்
சோகத்தில் தவிக்கின்றோம்.
தூக்கத்தை மறந்து, துடிப்புடன் திரிந்தவனே
அமைதியாக நீ உறங்கு!
உன் மரணத்தினால் உள்ள சோகம் எமக்கு
நிலையானது
உன் வாழ்வின் நினைவுகள் எமக்குத் துணை
யானது.

25, கரன் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(B-2365)

8 ஆம் மாத நினைவஞ்சலி



வீர ஜனனம்
09 — 01 — 1970

வீர மரணம்
05 — 08 — 1990

கப்டன் ஜோனி
(செல்வன் நெட்சணாமூர்த்தி சத்தியதாஸ்)
(முன்னாள் யாழ். மாவட்ட நிதிப் பொறுப்பாளர்)

அணைந்தும் அணையாத ஜோதியாய்
இறந்தும் இறவாது எம் உயிரில்
கலந்திரு கும் அன்பான எம் உள்ளமே!
சென்ற வருடம் இதேநாள் உம் இனிய
ஈழத்திலே எம்முடன் பத்து நிமிடமேனும்
தங்கி எம்மை வாழ்த்த மகிழ்வித்து கைக்கடிகாரம் பார்த்து
கடமையழைக்கிறது என சிரித்த முகத்துடன்
விடைபெற்றீர்! இவ்வருடம்.....? நீர் எங்கே?
உம் நினைவுகள் தோன்றாத நிமிடம் எம் நெஞ்சிலில்லை!
எம் நினைவுகளில் எலும் முகாரிராகம் பாடப்பட்டது
உம் முகத்தின் விரக்சிரிப்பு மட்டுமே மரணத்திலும் உயிர்த்தது.....
தமிழீழம் உமை அழைக்கிறது மீண்டும் எப்போ நீர் உதிப்பீர்?
அன்னாருடன் கோட்டைதில் வீரமரணமெய்திய
அனைத்து மாவீரர்களையும் இன்றும் நினைவுகூர்ந்து
அஞ்சலி செலுத்துகிறோம்!

பனாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

பெற்றோர், சகோதரர்கள்,
சகோதரி, உறவினர்கள்,
நண்பர்கள்.

(B-2366)

மக்களுக்கு ஏற்படும் நோய்களில் 80வீதம் நீரினால் பரவுகின்றது

உலகில் மக்களுக்கு ஏற்படும் நோய்களில் 80 சதவீதமானவை நீரினால் பரவும் நோய்களாகவே காணப்படுகிறதென உலக சுகாதார நிறுவன அறிக்கை தெரிவிக்கிறது.

வருடாந்தம் 6 மில்லியன் சிறுவர்கள் வயிற்றோட்ட நோயினால் இறக்கின்றனர். 100 மில்லியன் மக்கள் வயிற்றோட்ட நோயினாலும் 160 மில்லியன் மக்கள் மலேரியாவினாலும் 1 மில்லியன் பேர் தோல் வியாதிகளினாலும் பாதிக்கப்படுகிறார்கள். 1000 மில்லியன் பேர் லட்டப்புவினாலும் 800 மில்லியன் பேர் கொழுக்கிப்புழுவினாலும் 500 மில்லியன் பேர் நாடாப் புழுவினாலும் பாதிக்கப்படுகிறார்கள். சுத்தமான நீர் குடிப்பதற்கும் ஏனைய பாவனைகளுக்கும் கிடைக்குமானால் இந்நோய்களை கட்டுப்படுத்த முடியுமென்று அவ் வறிக்கை தெரிவிக்கிறது.

22 கோடி 56 லட்ச செலவீடு

இலங்கைத் தமிழ் அகதிகளின் மறுவாழ்வுக்காக இதுவரை தமிழக அரசு ரூபா 22 கோடியே 56 இலட்சம் செலவிட்டுள்ளது. இதில் ரூபா 21 கோடியே 22 இலட்சம் மத்திய அரசு மாநில அரசுக்கு வழங்கியுள்ளது.

அரசாங்க அறிவித்தல்

பிராந்திய
சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை
யாழ்ப்பாணம்.

இக்காரியாலயத்தின் பாவனைக்கு உதவாத பொருள்கள் 6-04-91 செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் இக்காரியாலயத்தில் விற்கப்படும். அந்தப் பொருள்களைப் பார்வையிட விரும்புவோர் அன்றுகாலை 9.00மணி முதல் பார்வையிடலாம்.

வைத்திய கலாநிதி ந. தனகசபை
சுகாதார சேவைகள்
பிராந்தியப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

சு. சே, பி. ப. பணிமனை
யாழ்ப்பாணம்.
10.04.91 (B/2350)

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி - மாமுனைமணம்
A/L 91 பகல் நேர வகுப்புகள்
ஆரம்பமாகி விட்டன
O/L புதிய பிரிவு ஆரம்பம்
15-04-91
Spoken English with Grammar
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது
(B - 2358

வேலை வாய்ப்புக்கள்

செய்தித் தகவல் மையம்

யாழ் மாவட்டத்தில் கல்வி பயின்று வேலை வாய்ப்பின்றியிருக்கும் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும், இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வேலைகளை இழந்துள்ளவர்களுக்கும் தகுதிக்கும் திறமைக்குமேற்ப தொழில் வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன

விண்ணப்பதாரிகள் பெயர் விலாசம், பிறந்த திகதி, கல்விக்கராதரம், அனுபவம், தொழில் நுட்பம் ஆகியவற்றைக்குறிக்கும் சான்றிதழ்களுடன் தாம் விரும்பும் தொழிலைக்குறிப்பிட்டு எதிர்வரும் 21- 05 1991 க்கு முன்னர் 'நிர்வாகி, செய்தித்தகவல்மையம், கோப்பாய்'' என்னும் விலாசத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்

விண்ணப்பதாரிகள் அனுப்பும் விண்ணப்பத்தின் மேலுறையின் இடது பக்க மூலையில் "வேலைபெறுவதற்கான(பதிவு)விண்ணப்பம்'' எனக் குறிப்பிட வேண்டும்

விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறும் வரிசைக்கேற்ப வேலை வாய்ப்பு வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

- நிர்வாகி
(செ: த: மை)

(B-2357)

ஆதரவாளர்கள், மாணவர்கள்
அனைவருக்கும் எம் இனிய
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

மலரும் புத்தாண்டுடன்
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

Diploma In Data Processing
and
Computer Programing In Basic Language.

WEEKDAY 19-04-91 (திங்கள், புதன், வெள்ளி)
WEEKEND 20-04-91 (சனி, ஞாயிறு)

✲ d BASE III ✲ LOTUS 1-2-3
✲ WORD STAR

O/L படித்த இருபாலாரும் சேரலாம்

COMPUTER PROGRAMING IN MATHEMATICS

கணிதத்துறையில் A/Lஇல் சித்தியடைந்த
மாணவர்கள் மட்டும் சேரலாம்



ஆரம்பம்: 20 - 04 - 1991

மேலதிக விபரங்களுக்கு:
UNIKCO COMPUTER CENTRE
37, Clock Tower Road
Jaffna.

(வெலிங்டன் சந்திக்கு வடக்குப்புறமாக உள்ள மேல்மாடியில்)
(B - 5923)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது இதயம் கலந்த
புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கிறோம்!

★ மின்சாரப் பொருட்களா?
★ அழகுசாதனப் பொருட்களா?
★ நவநாகரிகத்திற்கேற்ற புடைவை வகைகளா?
★ எவர்சில்வர், அலுமினியப் பொருட்களா?
★ கிளாஸ், பீங்கான் வகைகளா?
★ பாடசாலை, அலுவலக உபகரணங்களா?
பிளாஸ்ரிக் பொருட்களா?

இன்னும் உங்களுக்கு என்ன வேணும்? தயங்காமல் வாருங்கள்!
உங்களுக்கு சேவைசெய்ய என்றும் காத்திருக்கிறோம்!!

எழிலகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் தியேட்டர் அருகில்)

"எழிலகம்" யாழ்நகரில் முன்னணி
வியாபார ஸ்தாபனம்.

(B-2163)

நண்பர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் நலன் விரும்பிகள்

அனைவருக்கும்

எமது உளம் கனிந்த
புத்தாண்டு நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் வாழ்க்கை வளம் பெற
நல்லதோர் வழிகாட்டி.

"ஷ்ரா"

நிதித்துறையில் நேசக்கரம்
நீட்டும் நண்பன்

புது வருடத்தை முன்னிட்டு எமது பணிமனையில் பணக் கொடுக்கல்– வாங்கல்கள் நாளைதிங்கட்கிழமை(15-4-1991) வரும் சுபவேளையில் காலை 9. 15மணி முதல் 9. 45 மணி வரை நடைபெறும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

(B/2362)

2ஆம் ஆண்டு வீர அஞ்சலி

அரியரட்ணம் சிறிதரன்
(கரும்புலி கப்டன் தாடி சிறிஅண்ணா)

தாயின் மடியில் 3- 1- 1959 தமிழ் ஈழ மண்ணில் 14- 4- 1989

கந்தர் மடத்தில்
தமிழ் மண்ணுக்காய்
களப்பலியான
கரும்புலி சிறி அண்ணா!
இளமை வாழ்வின்
இனிமையை துறந்து
நமது சுதந்திரக் கொடியை
பறக்கவிட விரைந்த - கரும்புலியே
விடுதலையின் விடியலுக்கு முன்
விடுதலையாகி விட்ட–கரும்புலியே
தம்பியின் பாதையிலே
தமிழ் ஈழம் அமைத்திடவே
பொங்கி எழுந்த – கரும்புலியே
ஈழத்தமிழ் மண்ணுக்கு உரமாகி விட்டாய்!

உன் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்

பெரியகந்தை, தாய், சகோதரர்கள், ஹரி ஹரன் அண்ணா குடும்பத்தினர், மச்சான், மருமக்கள், நண்பர்கள்

சுன்னாவில் வடக்கு,
சண்டிலிப்பாய்.

(R 1322

நினைவு கூருகின்றோம்...

1991-04-14

வலிகாமம் பொறுப்பாளர்
மேஜர் சுபாஸ்
(புண்ணியமூர்த்தி உதயகுமார் - நவாலி)

ஆசன்
(தங்கராசா இருஷ்ணபிள்ளை-காரைதீவு)

லெப். அல்பேட்
(மருதப்பு இராசகுமார் - அரியாலை)

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் தமிழீழ கடற்பகுதியில் கடலில் சென்று கொண்டிருக்கையில் சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலால் வீரமரணமடைந்த

லெப். தவேந்திரன் (அமிர்தலிங்கம் சுந்தரகுமார் - திருக்கோணமலை)
நடேஷ்மாஸ்டர் (முத்தையா நடராசா - பொலிகண்டி)
சசி (திருக்கோணமலை)
சுனில் (திருக்கோணமலை)
நேரு (திருக்கோணமலை)
ரமணன் (முத்து சிவபாலன், வள்ளிக்குளம், அடம்பன்)
செல்வன் (பிலிப் பெனடிற், அடம்பன்)
ரவி (தேவராஜ், அடம்பன்)
லிங்கராஜா (க. எலியாஸ், அடம்பன்)
கணேஷ் மாமா (சந்தசாமி கணேசமூர்த்தி, வல்வெட்டித்துறை)
சுனா (சற்றுணராசா, நெற்பிட்டி)
கணேஷன் (கணேஷ், வல்லிபுரக்கண்டம்)
கதா (முத்துச்சாமி சுதாகர், வல்வெட்டித்துறை)
கபில் (ச துரைராஜ், அடம்பன்)
பாபு (செல்வகுமார், கண்டாவளை)
கமல் (அரிச்சுனராஜா நந்தகுமார், பொலிகண்டி)
திலீபன் (பொன்னுத்துரை யோகசிங்கம், மாவிட்டி)
தம்பி (வேலுப்பிள்ளை இரத்தினசிங்கம், ஆலங்கேணி)

1988ஆம் ஆண்டு அக்கரைப்பற்றில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த

அரசன் (தங்கராசா இருஷ்ணபிள்ளை, காரைதீவு.)

இதே ஆண்டு குழமுனையில் இந்தியப்படையினரின் சுற்றி வளைப்பின் போது வீரமரணமடைந்த

ராதா (வேலு பிள்ளை சிவானந்தன், ஒட்டுசுட்டான்)

1989ஆம் ஆண்டு வீஸ்வமடுவில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் காயமடைந்து சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

இளங்கோ (ஆழ்வாப்பிள்ளை ரவீந்திரன், ஒட்டிசுட்டான்

இதே ஆண்டு இந்தியப்படையினரின் முகாம் ஒன்றைத் தகர்க்க வெடி மருந்து அடங்கிய வாகனத்தைக் கொண்டு செல்கையில் தற்செயலாக ஏற்பட்ட விபத்தில் எமைப்பிரிந்த

வலிகாமம் பொறுப்பாளர்,
மேஜர் சுபாஸ் (புண்ணியமூர்த்தி உதயகுமார், நவாலி, மானிப்பாய்)
கரும்புலி கப்டன் சிறி அண்ணா
(அரியரட்ணம் சிறிதரன், சண்டிலிப்பாய்)
லெப். கரன் (கந்தையா பாஸ்கரன், திருநெல்வேலி)
லெப். அல்பேட் (மருதப்பு இராசகுமார் - அரியாலை)

இதே சம்பவத்தில் மரணமடைந்த பொதுமக்கள் அனையோரையும் இத்தினத்தில நினைவு கூருகின்றோம்.

–விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/2456)

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 14-04-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 2839 நிர்வாகபீடம்: 2205
தபெ. எண் 05

✵ சிந்தனைக்கு ✵

பிள்ளையார் பிடிக்கப்போய்
குரங்காய் முடிந்த கதை

தமிழ்ப்பழமொழி

சிங்கப்பூர் அல்ல பாங்கொக்

கொழும்பு நகரமும், கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையமும் இன்று சர்வதேசக் கடத்தல்காரர்களினதும், மோசடிக்காரர்களினதும் மையமாக மாறியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனை திசைரி கட்டுநாயக்கா விமானத் தளத்திலும் கொழும்பின் ஏனைய பாகங்களிலும் கடத்தல் பொருள்கள் சிக்குவதும், சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவோர் கைதாவதும் அதிகரித்துள்ளமை வலியுறுத்துமாட்போல் உள்ளது.

சிறிலங்காவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரஞ்சன் விஜேரட்னாவின் கொலைக்கு நாடு கடத்தப்பட்ட ஒரு கசினோ சூதாட்டக்காரரில் (ஜேசிம்) பொலிசாருக்குச் சந்தேகம் ஏற்படும் அளவிற்கு கொழும்பில் சூதாட்டக்காரர்களினதும், மோசடிக்காரர்களினதும் கை பலமாகவுள்ளது. சூதாட்ட விடுதிகளை நிர்வகித்த சீனாக்காரரான ஜே சிம்மிற்கு ஆயுதம் தாங்கிய வெளிநாட்டவர்கள் மெய்ப்பாதுகாவலர்களாக இருந்தமையும், வெளிநாட்டு பெண்களை வைத்து அவன் விபசாரத்தொழில் நடத்தியமையும் பின்னர் தெரியவந்துள்ளது. மேலும் ஜே சிம் சிறிலங்கா அரசாங்கத்தின் தேசிய பாதுகாப்பு நிதிக்கு நிதி வழங்கவும் முன்வந்தானாம்.

இதேபோன்று இன்று கொழும்பில் கடத்தல்காரர், போதைவஸ்துக்காரர், விபச்சாரிகள், சூதாட்டக்காரர்களின் கைவலுவாக ஓங்கியுள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு ஐந்து நட்சத்திரக் ஹோட்டல்களில் வேலை பார்த்து வந்த நாற்பது தாய்லாந்துப் பெண்கள் கடத்தப்பட்டதாகத் தெரிய வருகின்றது; இப்பெண்களுக்கு கடத்தல்காரர்களுடனும் சூதாட்ட விபச்சாரத் தொழிலுடனும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான சமூக விரோத, சட்ட விரோத செயற்பாடுகள் கொழும்பில் அதிகரித்துள்ளமைக்கு ஆட்சியில் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளே காரணமாகும். 1977இல் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி திறந்த பொருளாதாரக் கொள்கையை அமுல்படுத்தியது. இதன்மூலம் அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்க திட்டமிட்ட ஐ.தே.கட்சி சுதந்திர வர்த்தக வலயம், பாரிய கொழும்பு அபிவிருத்தி திட்டம் ஆகியவற்றை அறிமுகம் செய்தது. அவற்றில் வெளிநாட்டவர்களின் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காகப் பல சலுகைகளையும் அவர்களுக்கு வழங்கியது.

அதோடு இவற்றுக்கு இசைவானதாக உல்லாசப் பயணத்துறையை ஊக்குவிப்பதையும் அரசாங்கம் தனது கொள்கையாகக் கொண்டது. உல்லாசப் பயணத்துறை விருத்திக்காக பெரும் முதலீடுகளைச் செய்ததோடு, உல்லாசப் பயணிகளைக் கவருவதற்காகப் போதிய சலுகைகளையும் அளித்தது.

ஐ.தே.கட்சியின் இப் பொருளாதாரக் கொள்கைகளும் வெளிநாட்டவரைக் கவரும் நடவடிக்கைகளும் அன்றே பெரும் விரோதத்திற்குள்ளாகியது. இவற்றின் மூலம் நவீன காலனிவாதிகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் கிடைக்கும்மே ஒழிய சிறிலங்காவிற்கு பெரிதாக ஆலாபம் எதுவும் கிடைக்கப் போவதில்லை என புத்தஜீவிகள் உட்பட பலரும் எச்சரித்தார்கள்.

ஆனால் அரசாங்கம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. 'சிறிலங்காவை சில வருடங்களில் சிங்கப்பூர் ஆக்குவேன்' என அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா முழக்கமிட்டார். ஆனால் அவர் எதிர்பார்த்ததிற்கு மாறான சம்பவங்களே இடம் பெற்றன.

ஆதேவேளை, தமிழரின் தேசிய இனப்போராட்டமும் கூர்மைஅடைந்து ஆயுதப்போராட்டம் தீவிரமடைந்தது; இந்நிலையில் மேலும் வெளிநாடுகளில் தங்கியிருக்க வேண்டிய நிர்பந்தம் சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. இதனால் மேலும் வெளிநாட்டுக் கம்பனிகளுக்கும், வெளிநாட்டவருக்கும் கட்டுப்பாடுகள் தளர்ந்தன. இதனை வெளிநாட்டுக் கடத்தல்காரர்களும், மோசடிக்காரர்களும் பயன்படுத்தி கொழும்பைத் தமது பாதுகாப்பு வலயமாக ஆக்கிக் கொண்டனர்.

அத்தோடு உள்நாட்டில் தோன்றிய பொருளாதார நெருக்கடிகளினால் இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் ஏற்பட்ட அரசிற்கெதிரான சிந்தனைகளை மழுங்கடிக்கவும், திசைதிருப்பவும்வேண்டிய கட்டாயநிலையும் அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. இந்நிலையில் சமூக விதிகளுக்கு மீறியதும், சட்ட விதிகளுக்கு மீறியதுமான செயற்பாடுகளுக்கும் மறைமுக அங்கீகாரம்வழங்கவேண்டிய நிலை ஐ.தே.கட்சி அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. எடுத்துக் காட்டாக சிறிலங்கா அரசாங்கத்தன் தணிக்கைக்கு உட்பட்டு வரும் பல்வேறு படங்களே ஒழுக்கச் சீர்கேட்டையும், சட்ட விரோத செயற்பாடுகளைக் கொண்டவையாக இருப்பதைக்காணலாம்.

இன்றைய இந்நிலையினை தொகுத்து நோக்கும்போது ஐ.தே.கட்சியின் பதினான்கு வருட ஆட்சியில் சிறிலங்கா முழுவதும் மட்டுமல்ல கொழும்புகூடச் சிங்கப்பூர் ஆகவில்லை. ஆனால் கொழும்பு மேலும் ஒரு கராச்சியாகவோ, பாங்கொக்காகவோ அன்றி மணிலாவாகவோ ஆகியிருக்கின்றதென்றால் அது மிகையாகாது.

"பறிபோன உரிமைகளைப் பிச்சையாகப் பெற முடியாது"

- டாக்டர் அம்பேத்கார்

"பறிபோன உரிமைகளைப் பிச்சையாகப் பெற முடியாது, நீதிமானங்கள் மூலமோ, பன்றாடுவதன் மூலமோ நியாயம் பிறக்காது ஆடு-ஒளிதான் கோவில்களின் முன் வெட்டுகிறார்களே ஒழிய சிங்கங்களை அல்ல. சிங்கங்கள் போல் வீறு கொண்டு எழுங்கள்" என்று தீண்டப்படாதோர்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதி அம்சங்களை எதிர்த்துப் போராட மக்களுக்கு அறைகூவல் விடுத்தார் அம்பேத்கார்.

தீண்டப்படாதோர் முன்னேற, சமுதாய அமைப்பில் அவர்களுக்குச் சமத்துவ உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற உணர்வு அம்பேத்காருக்கு அவர் வாழ்ந்த சூழல் காரணமாகச் சிறுவயதிலிருந்தே இயற்கையாக அமைந்திருந்தது.

அம்பேத்காரின் தாய் தந்தையர்கள் மஹார் என்ற வகுப்பைச் சேர்ந்தவர்கள். மஹாராஷ்டிரம் என்ற பெயரே மஹார் என்பதிலிருந்து வந்தது எனபது வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாகும். மஹார்கள் மகாராஷ்ட்ரத்தின் பழங்குடி மக்கள்; வீரம்மறவர்கள், கிராமச்சிம்ம தூண் அடிப்படையில் மஹார்கள், மஹாஜன் இந்துக்கள் என்று அழைக்கப்படுவர்களால் தாழ்த்தப்பட்டவர்கள் என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தனர். மிருகத்துக்குக் கொடுக்கக் கூடிய அந்தஸ்தைக் கூட மஹார்களுக்கு மறுத்து வந்தனர்.

அம்பேத்காரின் தந்தை இராணுவ ஜீ கிழக்கிந்திய கம்பனி இராணுவப் பிரிவில் சுபேதார்--மேஜர் அந்தஸ்தைப் பெற்றவர், 1892 இல் பிரிட்டிஷ் அரசு உயர் ஜாதி இந்துக்களின் அரசைப் போலும் நோக்கத்தோடு மஹார்கள் பிரிட்டிஷ் இந்திய இராணுவத்தில் சேர்ந்து கொள்ள மாட்டார்கள் என்று பிரகடனம் செய்தது. இதை எதிர்த்து நடந்த கிளர்ச்சிக்கு இராமஜீ தலைமை தாங்கினார் ஆகவே தந்தை காட்டிய வழியில் மகன் அம்பேத்கார் தீண்டத்தகாதோர், என்று அனைத்து இந்தியாவிலும் ஒதுக்கப்பட்ட மக்களின் விடிவிற்கு மகத்தான அரும்பணம் செய்து கொண்டதில் ஆச்சரியமில்லை.

இளமைப் பருவம்

இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் கொங்கணி என்ற பிரதேசத்தில் அம்பாவாடே என்ற கிராமத்தில் 1891 ஏப்ரல் 14 ஆம் நாள் இராமஜீ என்பவருக்கும் பீமாபாய்க்கும் அம்பேத்கார் பதினான்காவது குழந்தையாக பிறந்தார்.

பம்பாயில் எல்பிஸ்டன் கல்லூரியில் பட்டம் பெற்று அங்கு மேல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். இந்தியாவில் கலைமாணிப்பட்டத்தைப்பெற்ற அம்பேத்கார், பரோடா, கோல்காம்பூர் சஸ்தான மன்னராஜாக்களின் பண உதவியுடன் அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் சென்று ஜனநாயகம், பாரிஸ்டர், கலாநிதி பட்டங்களை பெற்றுக் கொண்டார்.

இக்காலப்பகுதியில் பிரிட்டிஷ் அரசு இந்தியர்களை அடிமை ஒடுக்கியது. திலகர் ஆறு ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டு மாண்டலே சிறைக்கு அனுப்பட்டார். சர்வார்க்கர் சகோதரர்கள் அந்தமான் தீவுக்கு நாடு கடத்தப்பட்டனர். மஹாராஷ்டிரத்தில் பலவாலிபர்கள் தூக்கிலிடப்பட்டனர். அரசு ஜாதியை எதிர்த்துச்சிங்கம் மராட்டியர் திரு கொண்டு எழுந்தனர். இவை அனைத்தும் வாலிபர் அம்பேத்கார் மனதில் பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தினர்.

சுதந்திர இயக்கமும் தாழ்த்தப்பட்ட மக்கள் பிரச்சினைகளும்

இந்தியாவில் சுதந்திரப் போராட்டம், மகாத்மா காந்தியின் தலைமையில், மக்கள் இயக்கமாக வளர்ந்தது; தாழ்த்தப்பட்ட மக்களும் தமக்குச் சுதந்திரம் வேண்டிக் குரல் எழுப்பத் தொடங்கினர். விரசாவர்களும், மகாத்மாகாந்தியும் தாழ்த்தப்பட்ட மக்களை பிரச்சினையில் (ஹரி ஜனங்கள்) அதிக அக்கறை காட்டினர். 1924 மார்ச்சில் அம்பேத்காரும் இப் பிரச்சினையில் தம் கவனத்தைச் செலுத்தினர். தீண்டாமை ஒழிப்பு மாநாடு கூட்டினார். மாநாட்டில் தாழ்த்தப்பட்ட மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்கத் தனி ஸ்தாபனம் ஏற்படுத்த வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டது; அதே ஆண்டு ஜூனில் பகிஷ்கார ஒழிப்பு சபை தொடங்கப்பட்டது; இச்சபை தாழ்த்தப்பட்ட மக்களின் சமுதாய அரசியல் நிலையை உயர்த்துவது. இந்து சமுதாயத்தில் உள்ள ஜாதி இந்துக்களுக்குச் சரிசமமாக்குவது என்ற பணிகளில் ஈடுபட்டது;

அம்பேத்காரும், மகாத்மா காந்தியும் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டனர். ஆனால் இவ்விருவரினதும் அணுகுமுறைகளில் வித்தியாசம் இருந்தது;

மகாத்மா காந்திக்குச் சாதி அமைப்பை ஒழிக்க வேண்டும் என்ற கருத்து இருந்தபோதும் இந்து சமயத்தைப் பேணிக்காக்க வேண்டுமென்பது அவரது திடமான எண்ணம். அம்பேத்கார் சமுதாய புரட்சிக்காகப் பாடுபட்டார். சமுதாயத்தை அடியோடு அழித்துப் புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்பதே அம்பேத்காரின் நோக்கம். காந்தி ஜாதி இந்துக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்வராதலால், ஜாதிக் கொடுமைகளை நேரடியாக அனுபவிக்கவில்லை. அம்பேத்கார் தாழ்த்தப்பட்ட குடும்பத்தில் பிறந்து ஜாதி இந்துக்கள் இழைக்கும் இன்னல்களை நேரடியாக அனுபவித்தவர். இதனால் இந்த வேறுபாடு;

1925 ஆம் ஆண்டு திருவனந்தபுரம் சமஸ்தானத்தில் கேரளத்தில் வைக்கம் என்ற ஊரில் பெரியார் ஈ.வே.ராமசாமி சத்தியாக்கிரகத்தைத் துவக்கினார். அந்த ஊரில் தாழ்த்தப்பட்டோருக்குச் சில வீதிகளில் நடமாடப் பட்டிருந்தது. இதை எதிர்த்து நடந்த சத்தியாக்கிரகமும் வெற்றியில் முடிந்தது. இந்த நிகழ்ச்சி பெரியாரையும் அம்பேத்காரையும் ஒன்று சேர்த்தது;

> டாக்டர் அம்பேத்காரின் நூறாவது பிறந்ததினத்தையொட்டி இக்கட்டுரை வெளிவருகிறது.

> தாழ்த்தப்பட்ட மக்களின் இந்திய மிஷன் சோசைடி 1918 மார்ச் 23-24 திகதிகளில் பம்பாய் நகரில், முதல் அனைத்திந்திய தாழ்த்தப்பட்டோர் மாநாட்டை நடத்தியது. ராமமந்யா திலகர் மாநாட்டுக்கு பேசும்போது," கடவுள் தீண்டாமையை, வகுத்திருந்தால் அக்கடவுளை கடவுள் என்று நான் ஒரு போதும் ஏற்மாட்டேன். ஏதோ பண்டைக் காலத்தில் பிராமணர்களின் ஏகோபித்த அதிகாரச் செயலினால் தீண்டாமை ஏற்பட்டது இவ்வியாதியை அதனோடு ஒழிக்க வேண்டும்" என்றார். இம் மாநாட்டின் இறுதியில் அறிக்கை வெளியிடப்பட்டது. ஆனால் நிகழ்ச்சி இதில் கையெழுத்துப் போடவில்லை. ஜாதி இந்துக்களை பெரும் தலைவர் திலகரைக் கூடத் தடுத்து விட்டனர்.

> வகுப்பறையில் ஆசிரியர் அம்பேத்காரை அழைத்து கரும்பலகையில் கணக்குச் செய்யச் சொன்னார். சிறுவன் அம்பேத்கார் கரும்பலகையை நோக்கிச் செல்லும் முன்னரே மாணவர்கள் கூக்குரலிட்டனர்; கரும்பலகைக்குப் பிரயோகமாக அவர்கள் சாப்பாட்டுப் பொட்டலங்கள் வைக்கப்பட்டிருந்தன. அம்பேத்கார் கரும்பலகையின் அருகில் சென்றால் அவர்கள் உணவுப் பொட்டலங்கள் தீட்டாய் விடும். உயர் ஜாதிச் சிறுவர்கள் ஒடோடித் தங்கள் உணவுப் பொட்டலங்களைக் கையில் எடுத்துக் கொண்டனர்;

டாக்டர் அம்பேத்கார் இயக்கத்தைப் பலப்படுத்த ஓர் பத்திரிகை தேவை என்பதை உணர்ந்தார். 1927 ஏப்பிரல் 3ம் திகியன்று பகிஷ்கார் பாரத் (Bahiskrit-Bharat) என்ற பெயரில் மராட்டி மொழியில் ஒரு பத்திரிகையை வெளியிட்டார்;

தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை உயர்த்த அம்பேத்கார் 1928 ஜூன் மாதத்தில் தாழ்த்தப்பட்டோர் கல்வி கழகத்தை ஏற்படுத்தினார்;

இரண்டாவது வட்ட மேசை மகாநாடு

பிரித்தாளும் தந்திரோபாயத்தில் வெற்றிகண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் இனத் தீர்ப்பை (Communal Award) வெளியிட்டது முஸ்லிம்களை சீக்கியர்கள்

(2 ஆம் பக்கம் பார்க்க)

மதன்

எட்டு ஜனதாதள் முக்கியஸ்தர்கள் பதவியில் இருந்து இராஜினாமா

(புதுடில்லி)

அருண்நேரு, ஆரிப் முஹம்மது கான், சத்தியபால் மலிக் உட்பட எட்டு ஜனதா தளக் கட்சி முக்கியஸ்தர்கள் கட்சிப் பதவியிலிருந்து விலகி விட்டார்கள். வி.பி.சிங்கின் ஜனதா தள் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு மற்றும் அரசியல் விவகாரக் குழு உறுப்பினராக திரு அருண்நேரு, தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் திரு. ஆரிப் முஹம்மது கான், ஜனதா தள் பராளுமன்றக் கட்சித் தொடர்பாளர் சத்தியபால் மலிக் ஆகியோர் உட்பட மேலும் எட்டுப் பேர் கட்டாக ஜனதா தள் தலைவராக திரு எஸ். ஆர் பொம்மைக்கு எழுதியுள்ள கடிதத்தில் தமது பதவி விலகல் பற்றி அறிவித்துள்ளனர்.

ஜனதா தள் கட்சியில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லாமையே தமது பதவி விலகலுக்குக் காரணமெனக் குற்றம் சாட்டியுள்ள இவர்கள் கட்சியின் நலனை கருதி தேர்தலில் போட்டியிடப் போவதில்லை எனவும், அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து விலகவில்லை எனவும் கூறியுள்ளனர்.

இரு லொறிகள் மீது மூன்று விமானங்கள் தாக்கு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் இறிலங்காவிமானப்படைக்குச் சொந்தமான மூன்று குண்டு வீச்சு விமானங்களும், ஒரு ஹெலியும் வீதியால் சென்று கொண்டிருந்த லொறிகளின் மீது மேற்கொண்ட தாக்குதலால் இரண்டு லொறிகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: கடந்த வியாழக் கிழமை பிற்பகல் 3 மணியளவில் மன்னார் மாவட்டத்தினுள்ள பள்ளமடுவில் இருந்து பெரியமடுவை நோக்கிச் சென்று கொண்டிருந்த தமிழ்ப் பொதுமக்களுக்குச் சொந்தமான இரண்டு லொறிகள் மீது மூன்று குண்டுவீச்சு விமானங்கள் 18 குண்டுகளை வீசித்தாக்கின. அதுடன் ஹெலியொன்றும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவண்ணமிருந்தது.

இத்தாக்குதல்களால் ஒரு லொறி எரிந்து சாம்பரானது. மற்றைய லொறி முற்றாகச் சேதமடைந்தது. (மு)

கணவன் போத்தலால் தாக்கி மனைவி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

குடும்பத் தகராறு காரணமாக கணவரொருவர் தனது மனைவியைப் போத்தலால் குத்திப் படுகாயப்படுத்தியுள்ளார்.

நேற்று மாலை நடைபெற்ற இச்சம்பவத்தில் யாழ். இந்துக் கல்லூரி வீதியைச் சேர்ந்த திருமதி, முத்துமணி யோகராசா என்பவரே இவ்வாறு போத்தலால் குத்தப்பட்டு படுகாயமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (மு)

கனகராயன்குளத்தில் குண்டுவீச்சு; இருவர் காயம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள கனகராயன்குளம்பகுதியில் இறிலங்கா விமானப் படையினரின் குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதல் நடாத்தியதில் இரு பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளதுடன், பல வீடுகளும் பலத்த சேதமடைந்துள்ளன.

நேற்றுக்காலை எட்டு மணியளவில் கனகராயன்குளம் நகரப் பகுதியில் உள்ள சிரிசுவையைச் சூழவுள்ள பொதுமக்களின் குடியிருப்புக்கள்மீது இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதல் நடாத்தின. இத்தாக்குதலின்போது வீட்டில் தங்கியிருந்த கணவனும், மனைவியுமான திரு. ஆர். விஜயகுமாரன் (வயது 30) வி. சூரியகலா (வயது 27) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர். இவர்களின் மூன்று மாதக்குழந்தை மயிரிழையில் உயிர் தப்பியது. அருகில் இருந்த சுமார் நான்கு வீடுகள் பலத்த சேதமடைந்தன. அரிசி ஆலையும் சிறிது சேதத்திற்குள்ளானது. (க)

கிளிநொச்சியில் குண்டுவீச்சு; வயோதிபர் காயம்; வீடுகள் சேதம்

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மானாவளை பகுதியில் நேற்று முன்தினம் மாலை இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் இருதடவையாகத்த குண்டுவீச்சுக்களை நடாத்தியுள்ளன. இத்தாக்குதலில் ஒரு வயோதிபர் காயம் அடைந்ததுடன் சுமார் ஐந்து வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

குப்பை எரித்த போது ஷெல் வெடித்தது

(குருநகர்)

நிலத்தில் புதைந்திருந்த சிறிலங்கா ஷெல் மீது குப்பை போட்டு எரித்ததால் அது வெடித்துச் சிதறியது.

நேற்று (13.4.91) நண்பகல் 12.30 மணியளவில் குருநகர் மவுண்ட்காமல் வீதி இராசதுரை இராசகுலம் என்பவரது வீட்டின் பின்னாலிலிருந்த ஷெல் சத்தத்தை அடுத்து அப்பகுதி அல்லோலகல்லோலப்பட்டது.

இச்சம்பவத்தில்வீட்டுக்கூரை சிறிது சேதமடைந்தது. தெய்வாதீனமாக வீட்டில் இருந்தவர்கள் பிழைத்துக் கொண்டனரென தெரியவருகிறது. (21)

பயிற்சி வகுப்பு நடத்த ஆசிரியர் சங்கம் ஏற்பாடு

(நல்லூர்)

இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு (III) மூன்று போட்டிப் பரீட்சைக்குத் தயார் செய்வதற்கான பயிற்சி வகுப்புகளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடாத்த உள்ளது. யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் 1991 ஏப்ரல் 16,17,18,19,20 ஆம் திகதிகளில் தினமும் காலை 9 மணி தொடக்கம் மாலை 1.30மணி வரை வகுப்புக்கள் நடைபெறும்.

கல்வித் திணைக்கள அதிகாரிகள், பிரபல கல்லூரி அதிபர்கள் கருத்துரை வழங்குவர். விடய ஆய்வு, ரெகிதல், பொதுஉளச் சார்புக்கான பாடக்குறிப்புகளும், வினாத்தாள்களும் வழங்கப்படும்.

மேற்படி பரீட்சையில் தோற்றவிருக்கும் அதிபர், ஆசிரியர்கள் பங்குபற்றி பயன் பெறவும்,

இத்தகவலை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாலிங்கம் தெரிவித்தார். (B/2369)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "சுடரொளி" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி அச்சிடு வெளியிடப்பட்டது.

முதல் நாள்

★ கதாகரன்
★ சுரேன்
★ லைனல்
★ அசோக்
★ ஆல்பேட்
★ ரமேஜேந்திரன்
★ மனோ
★ தாஸ்
★ நிலகன்
★ விஜயன்
★ தீசன்

இந்திய வர்த்தகர்

பேச்சுவார்த்தை முடிவில்லை என்று வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் கூட்டுக் கமிஷன் ஒன்றை நிறுவுவதற்கு இரு பகுதியினரும் உடன்பட்டனர். இக்கூட்டுக் கமிஷனுக்கு இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும் தலைமை தாங்குவர்.

மியாங்குளத்தில்

இராணுவத்தினருக்குப் பலத்த சேதம் ஏற்பட்டதாயினும் தெளிவான விபரம் கிடைக்கப் பெறவில்லை எனினும் இம்மோதலை உறுதிபடுத்திய சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், பலர் காயமடைந்ததாகவும் தெரிவித்துள்ளன. அதே வேளை இருபத்தி இரண்டு புலிகள் இம்மோதலில் வீரமரணமடைந்தனர்.

இம்மோதல் இடம்பெற்ற வேளையில் ஒரு ஹெலிக் கொப்டர் தொடர்ச்சியான தாக்குதலை மேற்கொண்ட வண்ணம் இருந்தது.

மாவீரர்

இதேசமயம் கடந்த புதன்கிழமை காலைநேரத்தில் இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த லெப்டினன்ட் ரகுராமின் புகழுடல் அராலி வடக்கிலும், லெப்டினன்ட் குட்டியின் புகழுடல் தவக்கிரி, புத்தூரிலும் பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டுபின் கோப்பாய் மாவீரர் மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டன. (மு)

அடையாள அட்டைகளை

நடவடிக்கைகளால் வெளி மாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்து யாழ் மாவட்ட பரீட்சை நிலையங்களில் தோற்றுவதற்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகள்தமக்கு அனுமதி அட்டைகள் தபால் மூலம் கிடைக்காத பட்சத்தில் கல்வித் திணைக்களத்தில் மேற்படி அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

வருமானம் தொடர்பாக

தவறான தகவல் வழங்கிய அதிகாரிகள்மீது விசாரணை

(கொழும்பு)

எஞ்ச அணையாளர் திணைக்களத்திற்குத் தமது வருமானம் தொடர்பாகப் பிழையான விபரங்களை வழங்கியதாகக் நூறு அரசாங்க, கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளது. இத்தகைய பல்வேறு வழக்குகள் மஜிஸ்ரேட் நீதிமன்றங்களில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுடன் மூன்று வழக்குகள் மேல் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளன.

வருமானம் பற்றித் தவறான தகவல்களை வழங்கிய 12 உத்தியோகத்தர்களின் ஆவணங்களை அவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கும் சாத்தியம் பற்றி ஆராய்வதற்காகச் சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக எஞ்ச அணையாளர் தெரிவித்தார்.

செட்டிகுள இராணுவம் மீது சாளம்பைக்குளத்தில் தாக்கு

செட்டிகுளம் இராணுவ முகாமில் இருந்து புதன்கிழமை வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் குருக்கலூர் ஊடாக இராமேசன்கல் என்னுமிடத்திற்கு இரண்டு பவல்கள், இரண்டு கவசவாகனங்கள், நான்கு லொறிகள் என்பவற்றுடன் செல்லையில் பூவரசங்குளத்திற்கும் சாளம்பைக்குளத்திற்கும் இடையில் வைத்து விடுதலைப்புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலால் இராணுவத்தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றபோதும், சரியான சேதவிபரங்களை விபரம் தெரியவில்லை. பின்னர் மாலைமேனியளவில் இரண்டு ஹெலிகள் பூவரசங்குளம் பாடசாலையில் இறங்கி ஏறியது. இந்த ஹெலிகளில் இறந்த, காயமடைந்த இராணுவத்தினர் ஏற்றிச் செல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இதேவேளை கடந்த செவ்வாய்கிழமை பழைய ஊர், குஞ்சுவெந்தபுலவு ஆகிய இரு இராணுவ முகாம்களிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் சாளம்பைக்குளத்தை வந்தடைந்தனர்.

மறுதினம் புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் சாளம்பைக்குளத்தில் இருந்து பூவரசங்குளத்தை இராணுவத்தினர் வந்தடைந்தனர்.

இதேசமயம் கடந்த வியாழக்கிழமை மாலை ஆறுமணியளவில் பூவரசங்குளம் இராணுவத்தினரை நோக்கி விடுதலைப்புலிகள் முன்னேறியதைக் கண்ட சிறிலங்கா இராணுவத்தினர் மறைவிடங்களில் பதுங்கிப் படுத்தனர். இதைத் தொடர்ந்த இராணுவத்தினர் மீது புலிகள் 'ஆருன் 89' தாக்குதல் மேற்கொண்டனர். இத்தாக்குதலின்போதும் இராணுவத்தினர் தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை.

அன்னதான மடத்தில் 13 பேர் சுட்டுக் கொலை

(புதுடில்லி)

தாழ்த்தப் பட்ட இந்துக்களுக்கு அன்னதானம் வழங்கும் மடத்தில் இனந்தெரியாதநபர்கள் சிலர் இயந்திரத் துப்பாக்கிப் பிரயோகம்செய்தனர் இச்சம்பவம் கடந்தசெவ்வாயன்று பஞ்சாப்பில் செவியல் என்ற கிராமத்தில் இடம் பெற்றது.

இத்தாக்குதலின் போது பதின்மூன்றுபேர் விதவிதமாகவே கொல்லப்பட்டனர்.

யா. மாவட்டத்தில் வேலையற்றோர் 1 1/2 இலட்சம்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் ஒன்றரை இலட்சம் பேர் வேலையின்றி உள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் பிரதேசங்களில் நிலவி வரும் நெருக்கடி நிலைமை தொழில் நிலைமைகள் குழிந்துள்ள நிலைமை காரணமாகவே வேலையற்றோர் தொகை அதிகரித்திருப்பதாகத் தொழில் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

குடும்பஸ்தர் கொலை இழந்தார்

(யாழ்ப்பாணம்)

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் மிதிவெடியில் சிக்கி குடும்பஸ்தர் ஒருவர் தனதுகாலொன்றை இழந்துள்ளார்.

நேற்றைய தினம் நண்பகல் பன்னிரண்டு மணியளவில் தாண்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் புதைத்து வைத்த மிதிவெடியில் சிக்கிய கோப்பாய் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த நாகுபிள்ளையின் தந்தையான திரு. எம். இரட்ணம் (வயது 50) என்பவரே தமது காலொன்றை இழந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (மு)

ஒன்றை ஒன்று

நின்று கொண்டாடத் தொடங்கிய நிலை இவ்வருடம் 72 ஆவது விழாவிலும் தொடர்ந்து நீடிக்கிறது. இரு பகுதியினரையும் இணைத்து ஒரே விழாவாகக் கொண்டாட கடந்த வருடம் அப்போதைய அரிசாலைப் பிரதேச பொறுப்பாளர் பகீன் முயற்சித்தார். அவரது முயற்சி கைகூடவில்லை விக்கிரமாதித்த முயற்சியாக இவ்வருடம் அதேநாள் விழாவை முயற்சித்தார்கள். எனினும் இந்த நிலையில் மாற்றம் ஏற்படவில்லை.

இன்றைய தினம் இவ்விழாவின் இறுதிநாள் நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன. அரியாலை சனசமூக நிலையமைதானத்திலும், மத்திய விளையாட்டுக்கழக மைதானத்திலும் தனித்தனியாக விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் என்பன இடம் பெறவுள்ளன.